வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ந.க.எண் 5162/அ2/2022 நாள் 08.12.2022

| | |
|---|---|
| பொருள் | பள்ளிக் கல்வி – துறைத் தணிக்கை – அரசு / நிதியுதவி / நகராட்சி உயர் / மேல்நிலைப் பள்ளிகள் , ஆசிரியர் பயிற்சி நிறுவனம் மற்றும் அலுவலங்கள் – அகத்தணிக்கை மேற்கொண்டது – கடந்த கால தணிக்கை நிலுவை தடைகள் நிவர்த்தி செய்தல் – கூட்டமர்வு நடைபெறுதல் – தொடர்பாக. |
| பார்வை | தமிழ்நாடு பள்ளிக் கல்வி ஆணையரக நிதி ஆலோசகர் மற்றும் முதன்மைக் கணக்கு அலுவலரின் செயல்முறைகள் ந.க.எண் 073438/அகத/ 2022 நாள் 07.12.2022. |

பார்வையில் காணும் கடிதத்தின் படி, பள்ளிக் கல்வித்துறையின் கீழ், வேலூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து அரசு / நிதியுதவி/ நகராட்சி/ உயர் / மேல்நிலைப் பள்ளிகள் / ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் , முதன்மைக் கல்வி அலுவலகங்கள் மற்றும் மாவட்டக் கல்வி அலுவலகங்கள் மற்றும் பள்ளி வரவு செலவு கணக்குகளை துறை ரீதியாக கோவை மண்டலத் தணிக்கை அலுவலகம் மூலமாக அகத் தணிக்கை மேற்கொண்டதில் கண்டறியப்பட்ட தணிக்கைத் தடை நிலுவைப் பட்டியல் மேற்கண்ட அலுவலகம் / பள்ளிகளுக்கு தணிக்கை தடை நிவர்த்தித் தடை பத்திகளை நிவர்த்தி செய்யும் வகையில் கூட்டமர்வு காட்பாடி. ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, கூடுதல் முதன்மைக் கல்வி அலுவலகத்தில் **19.12.2022 மற்றும் 20.12.2022 ஆகிய நாட்களில்** நடைபெறவுள்ளது.

மேலும் கடந்த காலங்களில் ஏற்படுத்தப்பட்ட தணிக்கைத் தடை நிலுவைகள் அனைத்தையும் நிவர்த்தி செய்ய உரிய ஆதார ஆவணங்களுடன் ஆஜராக அரசு உதவிபெறும் உயர் / மேல்நிலைப் பள்ளி தலைமைஆசிரியர்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது.மேலும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள பொதுவான வழிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை பூர்த்தி செய்து தணிக்கைத்தடை நிவர்த்தி செய்யக் கோரும் படிவத்தினை முழுமையாக பூர்த்தி செய்து , மேற்காண் கூட்டதர்வில் சமர்பிக்குமாறு அனைத்து பள்ளி தலைமைஆசிரியர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

வேலூர், மாவட்டக் கல்வி அலுவலகம் (இடைநிலை ) சார்பான தணிக்கை தடைகளை நிவர்த்தி செய்ய உரிய ஆவணங்கள் தயார் செய்து கூட்டமர்வில் சமர்பிக்க தெரிவிக்கப்பட்டுள்ளது.

**இணைப்பு**

பொதுவான வழிமுறைகள் மற்றும் படிவம்

// ஒப்பம்//

// க.முனுசாமி //

முதன்மைக் கல்வி அலுவலர்,

வேலூர்

**பெறுநர்**

1. மாவட்டக் கல்வி அலுவலர், வேலூர்
2. அனைத்து அரசு / அரசு உதவிபெறும் பள்ளிகள் வேலூர் மாவட்டம்